ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2010), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மே 14] [திரு. கோ.சி. மணி]

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

பிரிவு 2, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. எல். ரவிச்சந்திரன்.

பிற்பகல் 1-20

திரு எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

Clause - 2

"In Clause 2, for the words 'Nine years and six months', substitute the words 'Nine years and three months"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். உங்களில் யார் வழிமொழிகிறார்கள்? (குறுக்கீடு) திரு. கே.எஸ். விஜயகுமார்.

@ 30-4-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எல். ரவிச்சந்திரனால் முன்மொழியப்பட்ட அந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழிமொழிகிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல் நடத்தாமல் மீண்டும் தனி அதிகாரிகளை நியமிக்கக்கூடிய இந்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டு, தேர்தலிலே நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்தினுடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது என்று கூறி, அந்தத் தேர்தல் இரத்துச் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர் சட்டமன்றத்தினுடைய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் கலந்தாய்வு செய்து இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிட்டு, தொடர்ந்து 6, 6 மாத காலமாகத் தனி அதிகாரிகளுடைய நீட்டிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய, ஒரு ஜனநாயகத்தினுடைய அங்கமாக விளங்குவது கூட்டுறவுத் துறை. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற அடிப்படையில் அடித்தளத்தில் இருக்கிற, நடுத்தரத்திலே இருக்கின்ற மக்களுக்காகப் பாடுபடக்கூடிய கூட்டுறவுத் துறையினுடைய தேர்தலைத் தொடர்ந்து நடத்தாதது மட்டுமல்ல, 2001-க்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற நிர்வாகிகளுடைய தவறுகள் காரணமாக, நான்காண்டு காலமாக அன்றையதினம் கூட்டுறவுச் சங்கங்களில் சீர்கேடுகள் ஏற்பட்டன. இந்த 4 ஆண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிற நீங்கள் தொடர்ந்து இப்படி 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தத் திருத்தச் சட்டத்தை, தேர்தலைத் தள்ளி வைப்பதும், தனி அதிகாரிகளை நியமிப்பதும் என்பது இந்த நாட்டினுடைய, ஜனநாயகத்தினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய கூட்டுறவுத் துறையை, அடித்தளத்தில் இருக்கின்ற நடுத்தர மக்களை இன்று தன்னம்பிக்கை இழக்கிற நிலையை உருவாக்குவது, இடைத்தேர்தலில் ஆர்வம் காட்டக்கூடிய நீங்கள் இந்தக் கூட்டுறவுத் தேர்தலைச் சந்திக்க இயலாமல் தனி அதிகாரியை

நியமிப்பதற்கு என்ன காரணம்? ஏன், உங்களால் முடியவில்லையா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது, விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் திருத்தம் கொடுக்கவில்லையே! (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், சொல்லுங்கள்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக முறைப்படி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று, அதேபட்சத்திலே, கூட்டுறவுச் சங்கங்களிலே பண்ணை சாராக் கடனுக்கு வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதோடு, வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களிலே வட்டிக்கு மேல் வட்டி இருக்கிற சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, அதைத் தள்ளுபடி செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் கருணை காட்ட வேண்டுமென்ற கருத்தையும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பு என்பது மக்கள் பங்கெடுக்கிற ஒரு அமைப்பு. அதனுடைய அடிப்படை நோக்கமே மக்கள் பங்களிப்பு. ஆனால் கூட்டுறவுத் தேர்தலைத் தள்ளி வைத்துக்கொண்டு, நடத்தாமல் இருப்பது என்பது அதனுடைய அடிப்படை நோக்கங்களை, இலட்சியங்களைச் சிதைப்பதாக அமைகிறது. எனவே, அந்த அடிப்படையில், இன்றைக்கு வைத்தியநாதன் கமிட்டி போன்ற கமிட்டிகள் எல்லாம் அமல் செய்யப்பட்டு, கூட்டுறவுத் தேர்தலிலே மக்கள் பங்களிப்பும், அதனுடைய சிறப்பான செயல்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்று கருதுகிற நேரத்தில், இந்தக் கூட்டுறவுத் தேர்தலைத் தள்ளி வைத்திருப்பது என்பது நியாயமற்றது. இன்னும் சொல்லப் போனால், மக்கள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக, கூட்டுறவு

[திரு. சு. குணசேகரன்] [2010 மே 14

அமைப்புகளின் மூலமாகப் பல்வேறு பயன்களை எதிர்பார்க்கிற நேரத்தில், மிகுந்த கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகிறார்கள். எனவே, உடனடியாக தமிழக அரசு கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற அந்த அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

அதோடு, ஒரு கருத்து. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான வீட்டுமனை வழங்குவது பற்றிய ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். நமது பேராசிரியர் அவர்கள் பேசுகிற நேரத்தில், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. அ. தமிழரசு அவர்களுடைய ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் குறிப்பிட்டுக் காட்டி, சட்டப் பேரவை உறுப்பினர்கள் எளிய வாழ்க்கையும், சிறப்பான பொதுச் சேவையும் செய்ய வேண்டுமென்ற அந்த ஓர் உறுதியை, அந்த ஒரு வெட்டுத் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிற நேரத்தில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அறிவிப்பை வெளியிட்டிருக்க வேண்டாமென்று . . .

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், அதுவெல்லாம் பின்னர் பேசலாம். முதலில் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள்.

திரு. சு. குணசேகரன்: இதோ முடித்துவிடுகிறேன். எனவே, அந்த அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், கொள்கை அடிப்படையிலே நாங்கள் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம் என்று எங்களுடைய பதிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கை அடிப்படையில் எதிர்க்கிறீர்களா? சரி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தைக் காப்பதாக இருக்க முடியாது. ஆகவே, விரைவில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்த வேண்டுமென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறது.

2010 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கலைஞர் ஆட்சி எப்போது வருகிறதோ, அப்போதுதான் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டுக் கொண்டு வந்தது. அது உண்மை. வேறு யாராலும் இதுவரை தேர்தலே நடத்தப்படவில்லை. எந்தக் கட்சியும் நடத்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அதற்கான தேர்தல் நடந்தபோது ஒரு சில அசம்பாவிதச் சம்பவங்கள் நடந்ததாகப் பத்திரிகையிலே செய்தி வந்த காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிறுத்திவிட்டார்கள். அதை நிறுத்தியதற்குப் பிறகு, இன்றையதினம் வரை தேர்தல் நடத்த முடியாததற்குக் காரணம், உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு தீர்வு பெறுமானால், அன்றைக்கே நான் தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நானும் அந்த எண்ணத்தில்தான் இருக்கிறேன் என்றும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>பிரிவு–2</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.